எரிபொருள் சிக்கனம், குரல் மூலம் செயல்பாடு, கட்டுப்பாடு வசதியுடன் டி.வி.எஸ். புதிய ஸ்கூட்டர் அறிமுகம் – விலை ரூ.92 ஆயிரம்



சென்னை ஜூலை 10–

பாரம்பரியமிக்க டி.வி.எஸ். குருப் நிறுவனமான டி.வி.எஸ். மோட்டார்ஸ், புதிய சொகுசு வசதிகள் டிஜிட்டல் மற்றும் குரல் மூலம் முழு செயல்பாட்டையும் கட்டுப்படுத்தும் வசதியுடன் டி.வி.எஸ். என் டார்க் 125 ரேஸ் ஸ்கூட்டரை அறிமுகம் செய்துள்ளது. இதன் விலை ரூ.91 ஆயிரத்து 537 ஆகும் என்று இதன் இணை நிர்வாக இயக்குனர் சுதர்சன் வேணு தெரிவித்தார்.

இந்திய ஸ்கூட்டர் தயாரிப்புத் துறையில் முதல் முறையாக குரல் வழியில் ஸ்கூட்டர் செயல்பாடு முழுவதும் கண்ட்ரோல் செய்யும் இணைப்பு இந்த புதிய ஸ்கூட்டரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நவீன தொழில்நுட்பம் ஸ்மார்ட் கனெக்சன் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த ஸ்மார்ட் கனெக்சன் தொழில்நுட்பம் வண்டி ஓடும் போது அதனுடைய செயல்பாட்டை விரைவுப்படுத்துதல், செல்லும் பாதைக்கு மேப் மூலம் வழி காட்டுதல், விளக்குகள் பிரகாசமாக எரிய வசதி செய்தல் போன்ற சிறப்பு அம்சங்கள் கொண்டது ஆகும். இந்த டி.வி.எஸ். என் டார்க் 125 ரேஸ் ஸ்கூட்டர் இதர ஸ்கூட்டர்களிலிருந்து வித்தியாசப்படுகிறது.

இதில் 125 சிசி எஞ்சின் உள்ளது. இதிலுள்ள நவீன எரிபொருள் சப்ளை வசதி ஸ்டார்ட் செய்தால் சீறிப் பாய்ந்து செய்யும் வசதி உள்ளது. அதிக உறுதி வாய்ந்த ஸ்டீல் மற்றும் அல்லாய் ஸ்டீல் மூலம் இதன் உதிரிப் பாகங்கள் உள்ளதால் குறைந்த எடையில் அதிக மைலேஜ் கொடுக்கும் வசதி உள்ளது என்றார் சுதர்சன் வேணு.

டி.வி.எஸ். மோட்டார்ஸ் மார்க்கெட்டிங் பிரிவு துணைத்தலைவர் அனிருதா ஹல்தார் பேசுகையில், இந்திய ஸ்கூட்டர் அமைப்பில் டி.வி. எஸ். என்டார்க் 125 ஒரு புரட்சி மாற்றம் செய்துள்ளது. இது வியக்கத் தக்கதாக, சக்தி வாய்ந்ததாகவும் டிஜிட்டல் வசதி கொண்டதாகவும் உள்ளது. இதில் இரண்டு ரக வசதிகள் உள்ளது. அதிக வேகமாக செல்லும் வசதியும், நகருக்குள் மெதுவாகச் செல்லும் வசதிக்கும் ஏற்ப பட்டன் உள்ளது. இதை செயல்படுத்தினால் அதற்கேற்ப பெட்ரோல் சிக்கனமாக பயன்படுத்தப்படுகிறது என்றார்.

இந்த புதிய ஸ்கூட்டரில் ப்ளூடூத் இணைப்புடன் டி.வி.எஸ். கனெக்ட் செல்போன் செயலியை பயன்படுத்தி இதன் செயல்பாடுகள் முழுவதையும் கட்டுப்படுத்தலாம்.

TVS NTORQ 125 ஸ்கூட்டர், நவீன *SMARTXONNECTTM* தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. ப்ளூடூத் தொழில்நுட்பம் மூலம் செயல்படும் இது ப்ரத்யேகமான *TVS Connect* மொபைல் அப்ளிகேஷன் உடன் இணைக்கப்பட்டுள்ளது. *TVS Connect* மொபைல் அப்ளிகேஷன், ஆண்ட்ராய்ட் மற்றும் ஐஓஎஸ் ஆகிய ப்ளாட் பார்ம்களில் கிடைக்கிறது. *NTORQ 125 Race XP* ஸ்கூட்டரில் இடம்பெற்றிருக்கும் வாய்ஸ் அசிஸ்ட் அம்சம், வாடிக்கையாளர்கள் வாகனம் ஓட்டுவதில் கவனம் செலுத்தியபடியே வாய்ஸ் கட்டளைகளைப் பிறப்பிக்க உதவுகிறது. இந்த அப்ளிகேஷன் 15 வெவ்வேறு வாய்ஸ் கட்டளைகளை நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வாகனம் ஓட்டுபவருக்கு வழிகாட்ட உதவும் நேவிகேஷன் முதல் சார்ஜிங் மோட் வரை அனைத்தையும் ப்ளூடூத் மூலம் இணைக்கப்பட்ட சாதனம் மூலம் வாய்ஸ் கட்டளைகளால் நிறைவேற்றமுடியும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் நவீனமயமாக்கப்பட்டுள்ள *TVS SMARTXONNECTTM* மூலம் வாடிக்கையாளர்கள் சாலைகளில் வாகனம் ஓட்டும்போதே பல்வேறு செட்டிங்குகளை கட்டுப்படுத்த குரல் அடிப்படையில் கட்டளையிட முடியும் என்றார்.

விஜிபி தமிழ்ச்சங்க 72 வது இலக்கியச் சொற்பொழிவு

மதமோ, சாதியோ செய்யத் தவறுவதை மனித நேயம்தான் செய்து முடிக்கிறது

சிறுபான்மை வாரியத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் உரை

சென்னை, ஜூலை 10–

மதமோ, சாதியோ செய்யத் தவறுவதை மனித நேயம்தான் செய்து முடிக்கிறது என்று விஜிபி உலகத் தமிழ்ச் சங்க 72வது இலக்கியச் சொற்பொழிவு விழாவில் பீட்டர் அல்போன்ஸ் கூறினார்.

விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 72 வது இலக்கிய சொற்பொழிவு காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. விழாவிற்கு ஜிபி உலகத் தமிழ்ச் சங்க தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், தமிழ்நாடு சிறுபான்மை வாரிய தலைவருமான பீட்டர் அல்போன்ஸ், மதம், மனிதம், மனித நேயம் என்ற தலைப்பில் பேசியதாவது:–

122 திருவள்ளுவர் சிலை

தமிழகத்தின் பிதாமகனாக இருக்கின்ற திருவள்ளுவரை உலகமெங்கும் எடுத்துச்செல்கின்ற பணிகளை அண்ணாச்சி செய்து வருகிறார். இதுவரை122திருவள்ளுவர் சிலைகளை உலகமெங்கும் அமைத்தவர் என்ற செய்தி, தமிழ் மண்ணுக்கும், தமிழுக்கும் பெருமை சேர்ப்பதாகும். திருவள்ளுவர் சிலை அமைப்பதின் வழியாக தமிழ்நாட்டின் பெருமைகளை உலகமெங்கும் எடுத்துச் செல்கின்ற பெரும் பணியை செய்து வருகின்றார்.

கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக, பெருந்தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளோம். பொதுவாக தொற்று நோய் என்றால், ஒரு நாட்டிலோ அல்லது ஒரு பகுதியிலோ அல்லது ஒரு கிராமத்திலோ நோய் வரும் போகும். ஆனால், இப்போது வந்திருக்கின்ற கொரோனா நோய், ஒரே நேரத்தில் உலகமெங்கும் வந்துள்ளது. இந்த நேரத்தில் மொழி, மதம், இனம், மனிதம் ஒன்றிணைந்து நிற்பதில்லை. மனிதநேயம் ஒன்றுதான் சமூகத்தை ஒன்று சேர்க்கிறது.

மனிதருக்கு மனிதர் உதவி செய்யும் நிலையை உருவாக்கியிருக்கிறது. அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். அண்ணா நகரிலே ஒரு பிராமணர் இறந்து விட்டார். அவரை அடக்கம் செய்ய உறவினர்கள், நண்பர்கள் வரவில்லை. அவரோடு வேலை செய்பவர்கள் வரவில்லை. ஈமச் சடங்கு நடத்துகின்ற புரோகிதரும் வரவில்லை.

இதைக் கண்ட இஸ்லாமிய இளைஞர்கள் ஓடிவந்து அந்த உடலை, பிராமணர்களின் முறைப்படி ஈமச்சடங்கு செய்து, அடக்கம் செய்தார்கள். இங்கே மதம் எங்கே இருக்கிறது? சாதி எங்கே இருக்கிறது? இனம் எங்கே இருக்கிறது? இதுதான் மனிதநேயம்.

ஒரு வீடு இருக்கிறது. மாடியில் இந்து குடும்பம், கீழே கிறிஸ்தவ குடும்பம். அது ஒரு கிறிஸ்மஸ் காலம். மாடியில் இருப்பவர் ஐயப்பனுக்கு மாலை போட்டிருந்தார். கிறிஸ்துமஸ் நாளில் வேடிக்கையாக, கிறிஸ்தவ குடும்பத்திலுள்ள குழந்தையிடம், இன்று கிறிஸ்மஸ் பிரியாணி எனக்கு தருவாயா? என்று கேட்டார். அதற்கு அந்த குழந்தை, அங்கிள், நீங்கள் ஐயப்பனுக்கு மாலை போட்ட நாளில் இருந்து, நாங்கள் நான்வெஜ் செய்வதில்லை என்று கூறினாள்.

அதைக்கேட்ட ஐயப்பன் மாலை போட்ட நண்பர், சாமி சரணம் ஐயப்பன் என்று சொல்லுகின்ற நான், அன்றைக்கு சாமி சரணம் ஏசப்பா என்று கூறினாராம். இதுதான் மனித நேயம். இதுபோல், பல உண்மைச் சம்பவங்கள் நம் நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன.

உலகத்தை எடுத்துக்கொண்டால் ஒரு புள்ளியிலிருந்து வந்ததுதான் மனித இனம். மனிதனுக்கு ஒரே பசி, ஒரே தாகம்தான். மதமோ அல்லது இனமோ, ஜாதியோ ஏதும் கிடையாது. உலக மக்கள் யாவரும் ஒரு குடும்பம் தான். இந்த கொரோனா காலத்தில் மனித நேயம் தழைக்க வைத்திடுவோம், அப்போதுதான் கொரோனா நோய் தொற்று உலகத்தை விட்டு வெளியேறும்.

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் பேசினார்.

நிறைவாக, விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் இணைச் செயலாளர் விஜிபி ராஜாதாஸ் நன்றி கூறினார்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ‘உற்பத்தி பொறியியல் துறை’ இணையவழி கருத்தரங்கம்



சிதம்பரம், ஜூலை 10–

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக உற்பத்திப் பொறியியல் துறையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் சி.முரளிதரன் டிஆர் மனோகரன் ஆகியோரை பாராட்டி பெருமைப்படுத்தும் வகையில் துறைத்தலைவர் வி.பாலசுப்பிரமணியன் ஏற்பாட்டில் “வேர்ல்டு கிளாஸ் மேனுபேக்சரிங்” என்ற தலைப்பில் ஒரு நாள் இணைய வழி கருத்தரங்கம் உற்பத்தி பொறியியல் துறை மற்றும் இந்தியன் வெல்டிங் சொசைட்டி அண்ணாமலைநகர் சென்டர் சார்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இந்தியாவின் தலை சிறந்த கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் புகழ் பெற்ற பேராசிரியர்கள் கோயம்புத்தூர் பிஎஸ்ஜி காலேஜ் ஆப் டெக்னாலஜி எஸ்.ஆர்.தேவதாசன், சென்னை இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி சி.ராஜேந்திரன், வெல்லூர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி எஸ்.தியாகராஜன், மதுரை தியாகராஜர் காலேஜ் ஆப் என்ஜினியரிங் பி.எல்கே.பழனியப்பன் ஆகியோர் பேசினார்கள்.

உற்பத்திப் பொறியியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு இணைய வழி மூலம் யந்திரங்களை இயக்குதல், முழுவதும் தானியங்கி தொழிற்சாலை போன்ற பல தலைப்புகளில் பேசினார்கள்.

இந்த கருத்தரங்கில் இந்தியா முழுவதிலும் பணியாற்றும் 600க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், இளநிலை, முதுநிலை மாணவர்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களில் பணி புரிவோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

துறைத்தலைவர் பேராசிரியர் வி.பாலசுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார். பொறியியல் புல முதல்வர் பேராசிரியர் ஏ.முருகப்பன் தலைமை வகித்து பேசினார். தமிழ்நாடு ஆசிரியர்கள் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் என்.பஞ்சநதம் துவக்க உரையாற்றினார். பேராசிரியர்கள் சி.முரளிதரன் மற்றும் டி.ஆர். மனோகரன் சிறப்புரையாற்றினார்கள். இந்தியன் வெல்டிங் சொசைட்டி அண்ணாமலைநகர் சென்டர் தலைவர் பேராசிரியர் கே.சண்முகம் மற்றும் செயலாளர் பி.சிவராஜ் நன்றி கூறினார்கள். இந்த கருத்தரங்கை பேராசிரியை எஸ். மலர்விழி தொகுத்து வழங்கினார்.

சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப்சிங் பேடியிடம், இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் மண்டல ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயல் இயக்குநர் கே.சைலேந்திரா, கிருமி நாசினி, முகக்கவசங்கள் அடங்கிய 500 எண்ணிக்கையிலான தொகுப்புகள் மற்றும் 200 குப்பைத் தொட்டிகள் ஆகியவற்றை வழங்கினர்.

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : எண் 13. 3வது பிரதான சாலை. அம்பத்தூர் தொழிற்பேட்டை.
சென்னை- 600 058. தொ.பேசி எண். 044-4228 1100 இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால்; இயக்குனர்கள் குழு, மே 21, 2021 அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற அதன் கூட்டத்தில் மார்ச் 31, 2021-ல் முடிவடையும் ஆண்டிற்கான தலா ரூபாய் 10/- சமவீத பங்கு ஒன்றுக்கு இடைக்கால ஈவுத் தொகை ரூ.25/- என (அதாவது 250%) அறிவித்துள்ளது. சமவீத பங்கு ஒன்றுக்கான இந்த இடைக்கால ஈவுத் தொகை ரூ.25/- டெபாசிட்டரிகளால் அளிக்கப்படும் பயனாளி உரிமையாளர் விவரங்களின் அடிப்படையில் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் மற்றும் பங்குகளை தாள் வடிவில் வைத்துள்ளவர்கள் விஷயத்தில் ஆகஸ்ட் 5, 2021 (வியாழக்கிழமை) முடிவில் கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேட்டில் காணும் பெயர்களையுடைய, உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். மேற்காணும் இடைக்கால ஈவுத் தொகை தகுதியுடைய பங்குதாரர்களுக்கு 27 ஆகஸ்ட், 2021 வெள்ளிக்கிழமைக்குள் வழங்கப்படும்.

நிதிச் சட்டம் 2020 திருத்தியுள்ள வருமான வரிச் சட்டம் 1961-ன் படி (சட்டம்) 01 ஏப்ரல் 2020-க்கு பிறகு கம்பெனியால் வழங்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் ஈவுத் தொகைகள் பங்குதாரர்கள் கைகளில் சேரும் பொழுது அது வரி விதிப்புடையது என்பது உங்களுக்கு தெரியும். எனவே, பங்குதாரர்களுக்கு அளிக்கப்படும் ஈவுத்தொகையில் உரிய விகிதத்தில் மூலத்தில் வரிப் பிடித்தம் செய்ய வேண்டியது (TDS) கம்பெனிக்கு அவசியமாகிறது. TDS வரி வீதம் என்பது பங்குதாரர்களின் குடியிருப்பு நாடு மற்றும் அவர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் கம்பெனியால் ஏற்கப்படுவது அடிப்படையில் மாறுவதாகும். அதன்படி TDS கழிக்கப்பட்ட பிறகு நிகர ஈவுத்தொகை பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் அதன் விவரம் பின்வருமாறு

முழுமையாக வரி இல்லாமை அல்லது ஏதேனும் குறைக்கப்பட்ட வரி விகிதம் விரும்பும் பங்குதாரர்கள் அதற்குரிய கோரிக்கைக்கு தேவையான சான்றுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். அவற்றை ஜூலை 31, 2021 அன்று அலுவல் நேரம் முடிவதற்குள் அனுப்ப பதிவாளர் இணையதளமான முகவரி:https://www.integratedindia.in/ExemptionFormSubmission.aspx ல் பதிவேற்றம் செய்யவேண்டும்.

இந்திய வாழ் பங்குதாரர்களுக்கு

- சட்டம் பிரிவு 194-ன் கீழ் மூலத்தில் வரி பிடித்தம் (TDS) என்பது 10% ஆகும்.
- FY 2021-22-ல் தனி பங்குதாரர்களுக்கு கம்பெனியால் விநியோகிக்கப்படும் ஒட்டுமொத்த ஈவுத் தொகை ரூ.5,000/-க்கு மிகாது இருக்குமானால் TDS பொருந்தாது.
- மூலத்தில் வரி என்பது படிவம் 15G சமர்ப்பிக்கும் பங்குதாரர்களுக்கு (நிறுவனம் அல்லது சிறு நிறுவனம் தவிர்த்து எந்தவொரு நபருக்கும் பொருந்தும்) மற்றும் 15H (60 வயதுக்கு மேற்பட்ட தனி நபருக்கு பொருந்தும்) பிடித்தம் செய்யப்பட மாட்டாது. ஆனால் அவர்கள் தகுதி நிபந்தனைகளை பூர்த்தி செய்பவர்களாக இருக்க வேண்டும். இந்த படிவங்கள். படிவம் 15 G மற்றும் / அல்லது படிவம் 15 H https://www.integratedindia.in/Exemption FormSubmission.aspx என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்
- பங்குதாரர்களிடம் உரிய செல்லத்தக்க PAN இல்லாவிட்டால் சட்டம் பிரிவு 206AA -ன் கீழ் TDS வீதம் 20 % பிடித்தம் செய்யப்படும்.
- சட்டம் பிரிவு 197-ன் கீழ் அளிக்கப்படும் குறைந்த வரி நிறுத்தி வைப்புச் சான்றிதழில் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் TDS பிடித்தம் செய்யப்படும். ஆனால், அதற்குரிய செல்லத்தக்க சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும்.
- பின்வரும் இந்திய வாழ் அல்லாத தனி நபர்களுக்கு அளிக்கப்படும் ஈவுத்தொகைகள் மீது வரி ஏதும் கழிக்கப்பட மாட்டாது. ஆனால், அவர்கள் பின்வரும் விவரங்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

a. காப்பீட்டு நிறுவனங்கள்

பங்குகளின் பயனாளி உரிமையாளர்கள் என்பதற்கான ஒரு உறுதி அறிக்கை மற்றும் சுயசான்றிட்ட செல்லத்தக்க IRDAI பதிவு சான்றிதழ் பிரதியை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

b.பரஸ்பர நிதிகள்:

சட்டம் பிரிவு 10 (23) D ஷரத்துகளின் கீழ் அவர்கள் நிர்வகிக்கப்படுவதாக ஒரு உறுதி அறிக்கை மற்றும் சுய சான்றிட்ட செல்லத்தக்க SEBI பதிவு சான்றிதழ் பிரதியை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

c. இந்தியாவில் நிறுவப்பட்ட மாற்று முதலீடு நிதி (AIF)

சட்டம் பிரிவு 10(23FBA) ன் கீழ் அதன் வருமானம் விலக்களிப்பட்டதாக ஒரு உறுதி அறிக்கை மற்றும் SEBI ஒழுங்கு முறைகளின் கீழ் பிரிவு I அல்லது பிரிவு II, AIF என நிறுவப்பட்டதாக சுய சான்றிட்ட பதிவு ஆவணங்கள் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

d.TDS விலக்கு பெறத் தகுதியுடைய எந்தவொரு அமைப்பும்:

TDS விலக்களிப்பட்ட அமைப்பு என்பதற்கான ஆதாரமாக செல்லத்தக்க சுய சான்றிட்ட ஆவண சான்றுகள் (உதாரணமாக உரிய பதிவு சான்று, அறிவிக்கை, ஆணை போன்றவற்றின் பிரதிகள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வெளிநாடு வாழ் பங்குதாரர்களுக்கு:

வருமான வரிச் சட்டம், 1961-ன் பிரிவு 195-ன் படி நடைமுறையில் உள்ள விகிதங்களில் வரிகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். சட்டத்தின் தொடர்புடைய ஷரத்துகளின்படி, அவர்களுக்கு வழங்கப்படும் ஈவுத்தொகையின் நிறுத்தி வைப்பு வரி வீதம் 20% ஆகும் மற்றும் பொருந்தக்கூடிய மேல் கட்டணம் மற்றும் மேல் வரி சேர்த்து. இருப்பினும், வருமான வரிச் சட்டம் பிரிவு 90 ன் படி, இந்தியாவுக்கும் பங்குதாரர்கள் வசிக்கும் வரி விதிப்பு நாட்டிற்கும் இடையிலான இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தம் (DTAA) ஷரத்துகளின் படி, அவர்களுக்கு கூடுதலாக பயனளிப்பது எதுவோ அதனை வெளிநாடு வாழ் பங்குதாரர் தேர்ந்தெடுக்கலாம். இந்த நோக்கத்திற்காக அதாவது வரி ஒப்பந்த பயன்களை பெற வெளிநாடு வாழ் பங்குதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டியவை.

1. பங்குதாரர்கள் வசிக்கும் நாட்டின் வரி அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட வரி வதிப்பு சான்றிதழின் (TRC) சுய சான்றிட்ட நகல் (2021-22 நிதியாண்டுக்கு செல்லுபடியாகும் TRC)
2. தேவைப்படும் அனைத்து விவரங்களும் TRC-ல் குறிப்பிடப்படவில்லை என்றால் படிவம் 10F-ல் சுய உறுதி அறிக்கை
3. இந்திய வருமான வரித்துறையால் அளிக்கப்பட்ட நிரந்தர கணக்கு எண் PAN - அட்டையின் சுய சான்றிட்ட பிரதி.
4. குறிப்பிடப்பட்ட முறையில் குடியுரிமை பெறாத பங்குதாரரால் பலன் பெறும் நபர் பற்றிய சுயசான்றளிக்கப்பட்ட உறுதி அறிக்கை.
5. வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள்(FII) மற்றும் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள் (FPI): நிதி சட்டம், சட்டம் 196D(1) பிரிவு ஷரத்துகளின் படி TDS 20 % சதவிகிதம் பிடித்தம் செய்யப்படும். பத்திரங்களில் இருந்து ஈஃப்ஐஐ வருமானத்தின் மீதான வரியைக் கழிக்கும்போது, வரி ஒப்பந்தம் பொருந்தக்கூடிய வரி செலுத்துவோர் மற்றும் வரி சான்றிதழ் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள பிற ஆவணங்களை யார் வழங்கியிருந்தாலும், வரி இருபது சதவீதம் அல்லது வரி ஒப்பந்த விகிதம் இதில் எது குறைவோ, அந்த வரி பிடித்தம் செய்யப்படும்.

ஈவுத்தொகைகள் மீது வரிப்பிடித்தம் செய்யும் போது/ வரி நிறுத்தி வைக்கப்படும் போது DTAA வீத பங்குதாரர்களுக்கான பயன்களை பின்பற்ற வேண்டும் என்ற கடமை கம்பெனிக்கு இல்லை. DTAA வீத பயன்களை பயன்படுத்துவது என்பது வெளிநாடு வாழ் பங்குதாரர்கள் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் முழுமை தன்மை மற்றும் கம்பெனியின் திருப்திகரமான ஆய்வுக்கும் உட்பட்டே நடைபெறும்.

சுருக்கமாக கூறினால் மூலத்தில் வரிப்பிடித்தம் செய்யப்பட்ட பிறகே ஈவுத்தொகை வழங்கப்படும். விவரம் பின்வருமாறு

- நிதியாண்டின் போது ரூ.5000/- வரை ஈவுத்தொகை பெறும் தனி பங்குதாரர்கள் அல்லது படிவம் 15G/15H (பொருந்துகின்ற படி) சமர்ப்பிக்கின்ற மற்றும் சுய சான்றிட்ட PAN அட்டை சமர்ப்பிக்கும் இந்திய வாழ் நபர்களுக்கு TDS இல்லை.
- செல்லத்தக்க PAN அட்டை வழங்கப்பட்டால்/ சமர்ப்பிக்கப்பட்டால் இந்திய வாழ் பங்குதாரர்களுக்கு 10%
- செல்லத்தக்க PAN அட்டை வழங்கப்படாவிட்டால்/ இல்லாவிட்டால் இந்திய வாழ் பங்குதாரர்களுக்கு 20%
- வெளிநாடு வாழ் பங்குதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலேயே வரி விதிப்பு செய்யப்படும். மேற்குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்காத வெளிநாடு வாழ் பங்குதாரர்களுக்கு 20% மற்றும் பொருந்துகின்ற மேல் கட்டணம் மற்றும் மேல் வரி.
- மேற்குறித்த சான்றிதழ்களின் சுய சான்றிட்ட பிரதிகள் / சட்டம் பிரிவு 197 ன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டால் குறைந்த / Nil TDS.
- சட்டம் பிரிவு 196D-ன் கீழ் FIIs மற்றும் EPIs-க்கு 20% மற்றும் பொருந்துகின்ற மேல் கட்டணம் மற்றும் மேல் வரி.

எனவே, மேற்படி விதிமுறைகளின் படி உரிய TDS தொகையை நிர்ணயிக்கவும் பொருந்துகின்ற படி வரி நிறுத்தி வைப்பு விகிதத்தை முடிவு செய்யவும் எங்களுக்கு உதவிட மேற்குறித்த ஆவணங்களையும் விவரங்களையும் சனிக்கிழமை 31 ஜூலை, 2021 தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு உங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. குறிப்பிடப்பட்ட நாளுக்கு பிறகு PAN எண்ணை சேர்க்கவோ, தாக்கல் செய்யப்பட்ட TDS வருமானத்தை திருத்துவதற்கான கோரிக்கை போன்றவற்றை நிறுவனம் ஏற்காது.

வருமான வரிச் சட்டம், 1961 இன் கீழ் புதிய விதிகளின்படி, ஒரு நபர் 2021 ஜூலை 1 ஆம் தேதி முதல் அதிக TDS வீதத்தை வசூலிக்க வேண்டும், அவர்கள் வரி செலுத்திய ஆண்டோடு தொடர்புடைய இரண்டு ஆண்டுகளுக்கு உடனடியாக வருமான வரி வருமானத்தை தாக்கல் செய்யவில்லை என்றால். கழிக்கப்பட வேண்டும்; மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு உடனடியாக (பிரிவு 206AB) ஒவ்வொன்றிலும் மொத்தம் TDS/TCS கடன் ரூ .50,000 / - அல்லது அதற்கு மேற்பட்டது.

இந்த புதிய பிரிவு TDS ஐ மேற்கூறிய விதிமுறைகளுக்கு ஒத்துவராததால் பின்வரும் விகிதங்களுக்கு மேல் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தை விட இரண்டு மடங்கு; அல்லது

இரு மடங்கு வீதம் அல்லது நடைமுறையில் உள்ள விகிதங்கள்; அல்லது

5% என்ற விகிதத்தில்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, பிரிவு 206AB & 206CCAன் படி ஒரு நபர் “குறிப்பிடப்பட்ட நபர்” என்பதை சரிபார்க்க வரி விலக்கு / சேகரிப்பாளர்களுக்கு வசதியாக “பிரிவு 206AB & 206CCA க்கான இணக்க சோதனை” வருமான வரித்துறை வசதி செய்துள்ளது. மேற்கண்ட விதிமுறைகள் இணங்கவில்லை எனக் கண்டறியப்பட்டால், நிறுவனம் உங்கள் PAN பயன்படுத்தி இணக்க சோதனை செய்து அதிக விகிதத்தில் வரியைக் குறைக்கும்.

Www.esabindia.com நிறுவனத்தின் இணையதளத்தில் தகவல் கிடைக்கும்.

வாரியத்தின் ஆணையின் படி
S. வெங்கடகிருஷ்ணன்
கம்பெனி செயலாளர்

சென்னை
9 ஜூலை, 2021

Karur Vysya Bank
Smart way to bank

வளசரவாக்கம் கிளை:
எண்.138, கிழக்கு காமகோட்டி நகர் விரிவு, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம், சென்னை-600087 Ph:044-24869777, 24869888

தங்க நகைகள் ஏல அறிவிப்பு

எங்கள் வங்கியில் கடன் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர், தவணை கடந்து நெடு நாட்கள் ஆகியும் கடன் தொகையை செலுத்தி நகைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை. நோட்டீஸ் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பியும் நகைகளை மீட்கவில்லை. எனவே **இந்த விளம்பரம் கண்டவுடன் அசல் வட்டியுடன் இதர செலவுகளையும் சேர்த்து வருகிற 05.08.2021 அன்று மாலை 3.00 மணிக்குள் வங்கியில் செலுத்தி நகைகளை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் கடனுக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவரின் செலவிலேயே 05.08.2021 அன்று மாலை 4.00 மணியளவில் எங்கள் வங்கி அலுவலகத்தில் வைத்து கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும்** அல்லது நிர்வாகத்தின் சௌகரியம் போல் மறு ஏல அறிவிப்பு ஏதுமின்றி வேறு தேதியில் ஏலம் விடப்படும் என்று இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளை மாற்றவோ, ஒத்திப் போடவோ கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். வாடிக்கையாளர்கள் இறந்து போய் இருப்பாரானால் ஏலம் சம்பந்தப்பட்ட விதிமுறை நிபந்தனைகள் யாவும் அந்த வாடிக்கையாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். **ஏல நிபந்தனைகளை வங்கியின் அறிவிப்பு பலகையில் காணலாம்.**

வ. எண்	நகைக்கடன் கணக்கு எண்	கடன் பெற்றவர் பெயர்	கடன் தேதி	நகை எடை கிராமில்
1	1264946000006963	லோகநாதன் A	23.10.2018	12
2	1264946000009882	தங்கதுரை C	27.08.2020	90.500

தேதி : 10.07.2021
இடம் : சென்னை

கிளை மேலாளர்
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

பொது அறிவிப்பு

இதன்மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், சென்னை 600 061, நங்கநல்லூர், ஸ்ரீலட்சுமி தெரு, எண்.5, ஸ்ரீ அன்னை பிளாட்ஸ், எப்1-ல் குடியிருக்கும் எனது கட்சிக்காரர் திரு. N. வெங்கடேசன், த/பெ. M.S. நந்தன், இந்து, வயது 51 அவர்கள் பம்மல் சார் பதிவு அலுவலகம், தாம்பரம் தாலுக்கா, திருநீர்மலை கிராமம், ரங்கா நகர், சர்வே எண்.296, தற்போதைய சர்வே எண். 296/27, மனை எண்.109ல் உள்ள 2600 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட சொத்திற்கு முழு உரிமையாளர் ஆவார்.

மேற்கண்ட சொத்துக்கான 30.03.1981 தேதியிட்டு 1130/1981 என்ற ஆவண எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனை பத்திரத்தை எனது கட்சிக்காரர் ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது தொலைத்துவிட்டார் என்று நான் இதன்மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, 30.03.1981 தேதியிட்டு 1130/1981 என்ற ஆவண எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனை பத்திரத்தை யாரேனும் வைத்திருந்தாலோ அல்லது கையகப்படுத்தி இருந்தாலோ அல்லது யாரேனும் அதற்கு உரிமை கோரினாலோ அல்லது மேற்கண்ட சொத்து மீது உரிமை கொண்டாடினாலோ இந்த விளம்பரம் வெளியான தேதியில் இருந்து 3 நாட்களுக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கீழ்க்கையொப்பமிட்டவரிடம் தெரிவிக்கவும்.

மேற்கண்ட காலமான 3 நாட்களுக்குள் எந்தவித கோரிக்கை அல்லது ஆட்சேபனை பெறப்படாவிட்டால் 30.03.1981 தேதியிட்டு 1130/1981 என்ற ஆவண எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனை பத்திரத்தை தொலைந்துவிட்டது மற்றும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் மேற்கண்ட சொத்திற்கு யாரிடம் இருந்தும் எந்த கோரிக்கையும் பெறப்படவில்லை என்றும் எனது கட்சிக்காரர் மேற்கண்ட சொத்தை அவர் விருப்பப்படி கையாள்வார் என்றும் பொதுமக்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

T.K. RAJESH, Advocate
7/4, Chandrasekar Street, Mandaveli Chennai - 600028

बैंक ऑफ इंडिया
பேங்க் ஆஃப் இந்தியா

மயிலாபூர் கிளை
174, லஸ் சர்ச் ரோடு, மயிலாபூர், சென்னை – 600004.

அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் பொது ஏலத்திற்கான அறிவிப்பு

பின் வரும் தங்க நகை கடன்தாரர்கள் அவர்களின் சட்டவாரிசுகள், தங்கம் / அணிகலன் வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் பொது மக்கள் கவனத்திற்கு கொண்டு வருவது என்னவென்றால் தொடர்ச்சியான நினைவூட்டல்கள் / அறிவிப்புகள் வங்கியால் அனுப்பப்பட்டு பின்வரும் கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்தவேண்டிய கடனை செலுத்த தவறி விட்டனர்.

எனவே மீண்டும் ஒரு முறை கடன்தாரர்களுக்கு அறிவிப்பு வழக்கப்படுகிறது ஒரு வேளை அவர்கள் தங்க நகைகளுக்கான மொத்த தொகை **19.07.2021**-க்குள் செலுத்த தவறினால் (தற்போது உள்ளவரை வட்டி மற்றும் அனைத்து கட்டணங்கள் / செலவுகள் உள்பட) மேற்படி அடமானம் வைத்த **22.07.2021** அன்று காலை **11.00 மணிக்கு** பொது ஏலம் விடப்படும் என்று இதன் முலம் அறிவிக்கப்படுகிறது. சம்மந்தப்பட்ட கடன்தாரர்களுக்கு ஏற்படும் சேதத்தின் எந்த சிரமத்திற்கும் வங்கி பொறுப்பேற்காது. எந்த கடன்தாரர்களிடமிருந்தும் எந்த குற்றச்சாட்டுகள் அல்லது உத்திரவாதங்கள் வழங்கபடமாட்டாது.

விருப்பமுள்ளவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள ரூபாய். 500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) முன்வைப்பு தொகையாக கிளை மேலாளரிடம் அட்டவணை நேரம் / நாளுக்குள் செலுத்த வேண்டும். இறுதி ஏலம் எடுப்பவர்கள் 48 மணி நேரத்திற்குள் முழுத்தொகையும் வங்கிக்கு செலுத்த வேண்டும், தவறினால் அவர்களின் முன்வைப்பு தொகை வங்கியால் இழக்க நேரிடும். மேலும் நிபந்தனை ஏதுமின்றி ஏலத்தேதியை மாற்றவோ தள்ளி வைக்கவோ நிறுத்தி வைக்கவோ ஏலத்தொகை குறைவாகவோ அல்லது போதுமானதாக இல்லையெனில் ஏலத்தை நிறுத்தி வைக்க வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு. மேலும் தேவைபட்டால் எந்தவொரு காரணமும் கூறாமல் மேலே கூறப்பட்ட ஏலத்தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை மாற்றவோ அல்லது நிறுத்தவோ வங்கிக்கு உரிமையுண்டு.

கடன்தாரர் பெயர்	நகை கணக்கு எண்.	நிலுவை தொகை	மொத்த எடை	கேட்பு தொகை(ரூ)
N. நிரஞ்சளா தர்ஷினி ஃபேபிரியன்	800273710000418	Rs.1,24,232.51 + 150 (அஞ்சல் கட்டணங்கள்)	35.500	1,18,463/-
N. நிரஞ்சளா தர்ஷினி ஃபேபிரியன்	800273710000419	Rs.86237.21 + 150 (அஞ்சல் கட்டணங்கள்)	49.100	1,71,155/-

தேதி : 10.07.2021
இடம் : **மயிலாபூர் கிளை**

கிளை மேலாளர்
பேங்க் ஆஃப் இந்தியா

TVS SRICHAKRA LIMITED

TVS BUILDING, 7 WEST VELI STREET, MADURAI – 625 001.

NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE(S)

Notice is hereby given that the following Share Certificate(s) issued by the Company is/are stated to have been lost/misplaced (with or without transfer deed) and the registered/bonafide holder(s) thereof has/have applied to the Company for the issue of Duplicate Share Certificate(s).

FOLIO NO.	NAME OF THE SHARE HOLDER(S)	CERT_NO.	DISTINCTIVE NO.	SHARES
25454	MRS. INDIRAVATHANA R ROSS	138642	6854877- 6854926	50
	DR. D REGINALD ROSS	138643	6854927-6854968	42

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate(s) . Any person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue Duplicate Share Certificate(s) in favour of the registered holder(s).

Place: CHENNAI
Date : 09-07-2021

TVS SRICHAKRA LIMITED
P. SRINIVASAN
SECRETARY

TVS சுந்தரம் ஃபாஸனர்ஸ் லிமிடெட்

CIN: L35999TN1962PLC004943
பதிவு பெற்ற அலுவலகம் : 98A, 7வது தளம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : +91 - 44 – 28478500 | தொலைநகல் : +91 - 44 - 28478510
மின்னஞ்சல் : investorshelpdesk@sfl.co.in | இணையதளம் : www.sundram.com

58வது வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கான உறுப்பினர்களுக்கு அழைப்பு அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013 பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் அடிப்படையிலான விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் (எம்சிஏ சுற்றறிக்கைகள்) முறையே ஜனவரி 13, 2021, ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020 மற்றும் மே 5, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்கள். 02/2021, 14/2020, 17/2020 மற்றும் 20/2020 மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் ஜனவரி 15, 2021 மற்றும் மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்கள் SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 மற்றும் SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 ஆகியவற்றின் கீழ் கம்பெனியின் பங்குதாரர்களுக்கான 58வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) **வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 20, 2021 அன்று காலை 10.00 மணிக்கு** பொதுவான ஒரு இடத்தில் உறுப்பினர்கள் பங்கேற்பதை தவிர்த்து காணொலி காட்சி (VC) / பிற ஆடியோ காட்சி (OAVM) மூலம் நடைபெறும்.

மேற்கண்ட எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கையின்படி முறையே கம்பெனி அல்லது அவர்களின் டெபாசிட்டரி பார்ட்டிசிபென்ட்ஸ்களிடம் (டெபாசிட்டரி) மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 58வது வருடாந்திர பொதுக்கூட்ட அழைப்பு அறிவிப்பு (அறிவிப்பு) மற்றும் 2020–2021ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை (வருடாந்திர அறிக்கை) மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பி வைக்கப்படும். உறுப்பினர்கள் VC / OAVM மூலம் மட்டுமே 58வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்க முடியும். 58வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் 58-வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு பதிவு செய்தல் உள்ளிட்ட தொலைதூர மின்னணு வாக்குப்பதிவில் பங்கேற்பதற்கான முறை அல்லது மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்தலுக்கான முறை ஆகியவை அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. கம்பெனிகள் சட்டம், 2013, பிரிவு 103ன் கீழ் VC / OAVM மூலம் பங்கேற்கும் உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை கணக்கிடப்படும். அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை கம்பெனியின் இணையதளம் www.sundram.com மற்றும் முறையே ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்களான பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் NSDL இணையதளமான https://www.evoting.nsdl.comல் கிடைக்கும்.

தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல் காகித வடிவில் / மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் முறையே கம்பெனி / டெபாசிட்டரிகளிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து 58வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை மற்றும் / அல்லது 58வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் VC / OAVM வசதியை பயன்படுத்தி பங்கேற்கவும். மின்னணு வாக்குப்பதிவிற்குமான லாகின் விவரங்களை பெற கீழ்க்கண்ட ஆவணங்களை ஸ்கேன் செய்து கம்பெனியின் பதிவாளரும் மற்றும் பங்கு மாற்று முகவருமான இன்டகிரேடட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு srirams@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். அதன் நகலை கம்பெனியின் investorshelpdesk@sfl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

a. கையொப்பமிடப்பட்ட கடிதத்தில் உங்கள் பெயர், போலியோ எண் மற்றும் முழுமையான முகவரி விவரம் (பங்குகள் காகித வடிவில் இருந்தால்) (அல்லது) மின்னணு வடிவில் இருந்தால் அதன் கணக்கு அறிக்கை நகல் (பங்குகள் மின்னணு வடிவில் இருந்தால்)

b. ஸ்கேன் செய்யப்பட்ட பங்கு பத்திர நகல் (முன் மற்றும் பின் பக்கம்) மற்றும்

c. சுய கையொப்பமிடப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பான் அட்டை (அல்லது) ஆதார் அட்டை

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், எலக்ட்ரானிக் கிளியரிங் சேவை அல்லது வேறு எந்த வழிகளிலும் ('எலக்ட்ரானிக் வங்கி ஆணை') தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ஈவுத்தொகையை பெற புதுப்பிக்காத நிலையில், ஈவுத்தொகையை நேரடியாக தங்கள் வங்கிக் கணக்கில் மின்னணு முறையில் பெற அவர்களின் மின்னணு முறையிலான வங்கி கணக்கை கீழ்க்கண்ட விவரங்கள் / ஆவணங்களுடன் கூடுதல் ஆவணமாக கம்பெனியின் பதிவாளரும் மற்றும் பங்கு மாற்று முகவருமான இண்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு srirams@integratedindia.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். அதன் நகலை கம்பெனியின் investorshelpdesk@sfl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

a. ஈவுத்தொகை பெற வேண்டிய வங்கியின் பெயர் மற்றும் கிளை மற்றும் வங்கி கணக்கு வகை

b. கோர் வங்கி தீர்வுகளை அமல்படுத்திய பின்னர் உங்கள் வங்கியால் ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண்

c. 11 இலக்கம் கொண்ட ஐஎஃப்எஸ்சி குறியீடு; மற்றும்

d. பங்குகளை கூட்டாக வைத்திருந்தால், முதல் நபரின் பெயரைக் கொண்ட ரத்து செய்யப்பட்ட காசோலை சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்.

மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னணு வங்கி ஆணையை தங்கள் டெபாசிட்டரியிடம் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இந்த தகவல் எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கைக்கு இணங்க கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களின் நலனுக்காக தெரிவிக்கப்படுகிறது.

சுந்தரம் ஃபாஸனர்ஸ் லிமிடெட்டிற்காக
ஆர்.திலீப்குமார்
துணை தலைவர் – நிதி & நிறுவன செயலாளர்

இடம் : சென்னை
தேதி : ஜூலை 10, 2021